**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 648/2023**

**Prosecution Witnesses : 7**

Name : **லிங்கசாமி** Caste :
Father Name/ : Calling :
**வேட்டைக்காரதேவர்**
Husband Name
Village : Religion :
Taluk : Age :

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(18.07.2025)**
**முதல் விசாரணை**

நான் தற்போது மதுரை மாவட்டம் திருமங்கலம் வட்டம் சிந்துபட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு கடந்த 17.10.2022 ம் தேதி காலை 9 மணிக்கு திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் பணியிலிருக்கும் போது முருகன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி அவருடைய உறவினர் போஸ் என்பவர் வாகன விபத்தில் காயம்பட்டு அது தொடர்பாக அவர் கொடுத்த புகாரைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 232/2022, பிரிவுகள் 279, 337 இதச வின் படி வழக்கு பதிவு செய்தேன். மேற்படி அசல் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும். பின்பு புகாருடன் முதல் தகவல் அறிக்கையை இணைத்து திருமங்கலம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு இவ்வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அதே நாள் 10 மணியளவில் சம்பவம் இடம் சென்று பார்வை மகசர் சாட்சிகள் சங்கு மற்றும் பாண்டியராஜ் ஆகியோர்களின்

முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.5, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகும். மேலும் பட்டியல் சாட்சிகள் முருகன், தங்கம், சந்திரசேகர், ஸ்ரீதர் மற்றும் மகசர் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். இவ்வழக்கில் காயம்பட்டபோஸ் என்பவர் வேலம்மாள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்ததால் அவரை விசாரித்து வாக்குமூலம் பெற இயலவில்லை. அதே நாள் திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் வைத்து 18.30 மணிக்கு எதிரி அருள்சுந்தர் என்பவர் காரணம் கூறி கைது அவர் சம்பவத்தின் போது ஓட்டிய வாகனமான TN 06 L 9695 என்ற காரை தக்க வேண்டுகோள் கடிதத்தின் படி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தேன். எதிரியை தக்க பிணையில் விடுவித்தேன். பின்பு வழக்கில் காயம்பட்ட போஸ் என்பவர் 25.10.2022 21.45 மணிக்கு இறந்துவிட்டதால் இவ்வழக்கின் புலன் விசாரணையை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் கு.வி:**

சம்பவம் நடந்ததாக சொல்லும் நாள் 16.10.2022 ம் தேதி இரவு 19.20 என்றால் சரிதான். புகார் கொடுத்தது மறுநாள் காலை 17.10.2022ம் தேதி காலை 9 மணி என்றால் சரிதான். அந்த இடைப்பட்ட காலத்திற்கான காலதாமதம் எனன என்றால் புகார்தாரர் காயம்பட்ட நபரை மருத்துவமனைக்கு கூட்டி சென்று சிகிச்சைக்கு சேர்த்து மருத்துவமனையில் அவருக்கு உதவியாக இருந்தும் அதற்கு பிறகு காயம்பட்ட உறவினர்கள் வந்தபடியால் மருத்துவமனையில் பார்த்து கூறிவிட்டு நிலையம் வந்ததால் காலதாமதம் என குறிப்பிட்டுள்ளார். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் இரண்டு பக்கமும் ரோட்டிற்கு கீழ் பெரியார் நகர் பேருந்து நிறுத்தம் உள்ளது என்றும் சம்பவயிடத்திற்கு மேல் புறம் கரிசல்பட்டி பேருந்து நிறுத்தம் உள்ளது. மேற்கு திசையில் பெரியார் பேருந்து நிறுத்தம் உள்ளதாக இருப்பது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் புகார்தாரர் தான் கண்ணுற்ற சாட்சியாக உள்ளார் என்றால் சரிதான். இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சி அ.சா.1 தனது விசாரணையில் சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் எந்த இடத்தில் இருந்தார் என குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. எந்த திசையில் பார்த்தார் என்ற விபரம் எனது விசாரணையில் சொல்லவில்லை. எனது மாதிரி வரைபடத்தில் செண்டர் மீடியனில் காட்டிருக்கும் குறிப்பு

என்னவென்றால் நான்குவழிச்சாலையை இரண்டாக பிரிப்பதற்கு சுவரை தான் குறிப்பிட்டுக்காட்டியுள்ளேன். மாதிரி வரைபடத்தில் சுவரில் இடையில் ஏதும் இடைவெளி பாதை எதும் காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. எனது மாதிரி வரைபடத்தில் வழிப்போக்கர்கள் போவதற்கும் பாதசாரிகள் கடப்பதற்கும் ரோட்டிற்கு ஒரு புறத்திலிருந்து மறுபுறம் போவதற்கு சீ புரா கிராஸிங் லைன் எதும் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்டுள்ள இடத்தில் வணிக வளாகங்கள் மற்றும் கடைகள் இருந்ததா என்றால் வாதி மற்றும் அருகில் சில பேர் இருந்தார்கள். வாதியை மட்டும் விசாரித்தேன். மற்றவர்களை விசாரிக்கவில்லை என்று நான் எனது விசாரணையில் சொல்லவில்லை. சம்பவயிடத்தில் இருந்து திருமங்கலம் வரவேண்டும் என்றால் ரோட்டின் மேற்கு புறத்தில் உள்ள கரிசல்பட்டி பேருந்து நிறுத்தம் வழியாக தான் வரவேண்டும் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் வேறு நபர்களும் இருந்ததால் அவர்களை விசாரித்திருந்தால் உண்மை விபரம் தெரியவரும் என்றாலும் அ.சா.1 இறந்துபோனவருக்கு உறவினர் என்ற முறையால் சம்பவத்தில் இல்லாத அவரை வேண்டும் என்றே பொய்யாக சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவ சாட்சி அ.சா.1 சம்பவயிடத்திலேயே இல்லாததால் தான் அவரால் சரியாக சாட்சி சொல்லமுடியவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. விபத்தானது இறந்து போனவரின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்றாலும் இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 648/2023**

**Prosecution Witnesses : 8**

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர். அருண்பாலன் | Caste | : |
| Father Name/ Husband Name | : மோகன்காமராஜ் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(18.07.2025)**
**முதல் விசாரணை**

நான் தற்போது மதுரை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம்சார்ந்த மருத்துவதுறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 26.10.2022 அன்று பகல் 12.00 மணிக்கு நான் பணியிலிருந்தபோது திருமங்கலம் தாலுகா கா.நி.கு.எண். 232/2022 வழக்கில் வாகன விபத்தாகி இறந்துபோன 60 வயது மதிக்க தக்க போஸ் என்ற ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு உட்டுத்தவேண்டி திருமங்கலம் தாலுகா கா.நிலைய முதல்நிலைக் காவலர் 580 திரு.சௌந்திரராஜன் என்பவர் மேற்படி காவல் நிலைய உதவி ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்துடன் ஆஜராகி பிரேதத்தின் அங்கமச்ச அடையாளங்களை சரிபார்த்து பிரேத பரிசோதனைக்கு ஆஜர்படுத்தினார். பிரேத பரிசோதனை அன்று பிற்பகல் 12.20 மணிக்கு தொடங்கி 1.20 மணிக்கு முடிவு பெற்றது. பிரேதம் 165 செண்டி மீட்டர் நீளமும் அதன் தோள்பட்டையின் அகலம் 34 செ.மீ, பிரேத விறைப்பு தன்மை உடல்முழுவதும் காணப்பட்டது. பிரேதத்தில் கண்விழி கலங்கியும், வாய் மூக்கு மற்றும் காது துவாரங்கள் சீராகவும், கை கால் விரல் நகங்கள் நீலநிறத்திலும் காணப்பட்டது. பிரேத நடுத்தர உடல் வாகுடனும் நடுத்தர போசாக்குடனும் காணப்பட்டது. பிரேதத்தின் கழுத்து முன்பகுதியில் சிகிச்சைக்காக

துளையிடப்பட்டிருந்தது. பிரேதத்தின் மீது காணப்பட்டது காயங்கள் பின்வருமாறு 1. தலையில் வலது உச்சிப்பகுதியில் 5X 2 CM அளவில் குணமடைந்த சிராய்ப்பு காயம் காணப்பட்டது. 2. வலது கணுக்காலில் 1x1CM அளவில் குணமடைந்த சிராய்ப்பு காயம் காணப்பட்டது. 3,இடது காலில் 2x1 CM அளவில் பாதி குணமடைந்த சிராய்ப்பு காயம் காணப்பட்டது.4. வலது காலின் வெளிப்புறத்தில் 3x1 CM அளவில் பாதி குணமடைந்த சிராய்ப்பு காயம் காணப்பட்டது. தலையை கூராய்வு செய்து பார்த்ததில் தலைத்தோலின் வலது உச்சி மற்றும் பக்க பகுதியில் 9x8 CM அளவில் கருநீலநிற கன்றிய காயம் காணப்பட்டது. தலைத்தோலின் முன்பகுதியில் 5x4 CM அளவில் கருநீலநிற கன்றிய காயம் காணப்பட்டது. மூளை 1457 கிராமுடன் காணப்பட்டது. மூளையின் உறையின் வெளிப்புறத்தின் வலது பக்க பகுதியில் 6x4x0.5 CM அளவில் இரத்தக்கட்டி காணப்பட்டது. மூளையின் உறையின் உட்புறத்தில் இடது பக்க பகுதியில் 5x3x0.5 CM அளவில் இரத்தக்கட்டி காணப்பட்டது. மூளையின் உறைகளுக்கு அடியில் பறந்த இரத்தக்கசிவு காணப்பட்டது. கழுத்தை கூராய்வு செய்து பார்த்ததில் கழுத்து தசைகள் மற்றும் உணவு குழாய் மற்றும் மூச்சுக்குழாய் மற்றும் அதனை சுற்றியுள்ள எலும்புகள் சீராக காணப்பட்டது. மார்பை கூராய்வு செய்து பார்த்ததில் மார்பு எலும்பு சீராக காணப்பட்டது. மூச்சுக்குழாய், உணவுக்குழாய் சீராக காணப்பட்டது. மார்புக்கூடு காலியாக காணப்பட்டது. வலது நுரையீரல் எடை 431 கிராம்,அதன் வெட்டு தோற்றத்தில் இரத்தம் செறிந்தும் அடிப்பகுதி கடினதன்மையுடன் காணப்பட்டது. இடது நுரையீரல் 396 கிராம் எடையுடனும் அதன் வெட்டுத் தோதோற்றத்தில் இரத்தம் செறிந்தும் அடிப்பகுதி கடினதன்மையுடன் காணப்பட்டது. இருதய மேல் உறையில் வைக்கோல் நிற திரவம் காணப்பட்டது. இருதயம் 298 கிராம் எடை அதன் வலது அறையில் திரவ இரத்தமும் இடது அறை காலியாகவும் இருதய தமனிகள் சீராகவும் காணப்பட்டது. வயிற்றுப்பகுதியை கூராய்வு செய்து பார்த்ததில் வயிற்றுக்கூடு காலியாகவும் இறைப்பை 50 மில்லி அளவிலான மர நிற திரவம் எவ்வித நெடியின்றியும் அதன் சிலட்டு படலம் சீராகவும் காணப்பட்டது. சிறுகுடலில் 15 மில்லி அளவிலான பித்த நீர் திரவம் எவ்வித நெடியின்றியும் அதன் சிலட்டு படலம் சீராகவும் காணப்பட்டது. பெருங்குடல் சீராக காணப்பட்டது. கல்லீரல் மற்றும் பித்தப்பை 1548 கிராம் எடையுடனும் அதன் வெட்டுத்தோற்றத்தில் இரத்தம் செறிந்தும் காணப்பட்டது. மண்ணீரல் 176 கிராம் எடையுடனும் அதன் வெட்டுத்தோற்றத்தில் இரத்தம் செறிந்தும் காணப்பட்டது. கணையம் 82 கிராம் எடையுடனும் அதன் வெட்டுத்தோற்றத்தில் இரத்தம் செறிந்தும் காணப்பட்டது. வலது சிறுநீரகம்

240 கிராம் எடையுடனும் அதன் வெட்டுத்தோற்றத்தில் இரத்தம் செறிந்தும் காணப்பட்டது. இடது சிறுநீரகம் 207 கிராம் எடையுடனும் அதன் வெட்டுத்தோற்றத்தில் இரத்தம் செறிந்தும் காணப்பட்டது. சிறுநீர்ப்பை காலியாக காணப்பட்டது. இடுப்பு எலும்புகள் மற்றும் பால் உறுப்புகள் சீராகவும் காணப்பட்டது. முதுகு தண்டுவடம் சீராக காணப்பட்டது. ஒரு நபர் நடந்து சென்று கொண்டிருக்கும்போது வேகமாக கார் அவர் மீது மோதும் போதுமேற்சொன்ன காயங்கள் ஏற்படுமா என்றால் சரிதான்.

**<u>கருத்து</u>**

இறந்த நபரானவர் அவரது கபால எலும்பு மற்றும் மூளையில் ஏற்பட்ட காயங்கள் மற்றும் அதன் பின்விளைவுகளினால் இறந்திருக்கலாம் என சான்று வழங்கியுள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் பிரேத கூராய்வு அறிக்கை நான் வழங்கியது தான். அந்த பிரேத கூராய்வு அறிக்கை அ.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.** இல்லை